# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2013 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, சுங்கம் (திருத்தச்) சட்டம்*

---

*(2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2013, மாச்சு மாதம் 22 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 4.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2013 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, சுங்கம் (திருத்தச்) சட்டம்**

[*2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ-24/2013*

**(235 ஆம் அத்தியாயமான) சுங்கக்கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக:-*

**1.** இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, சுங்கம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (235ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:- *235 ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

*"(1அ) இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படும் அல்லது இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் ஏதேனும் பண்டங்கள் மீதான சுங்கத் தீர்வை விதித்தல் அல்லது விலக்களித்தல், ஏதேனும் பண்டங்கள் மீதான சுங்கத் தீர்வை செலுத்துவதற்கான நிபந்தனை அல்லது விதிவிலக்கு அல்லது பண்டங்களின் வகுப்பாக்கம் அல்லது விவரணம் தொடர்பில் பிணக்கொன்று இருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப அத்தகைய பண்டங்களின் இறக்குமதியாளர் அல்லது ஏற்றுமதியாளர், பணிப்பாளர் தலைமையதிபதியின் தீர்மானத்துக்கென உடனடுத்து விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம்.*

*(1ஆ) பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களில் (1அ) என்னும் உட்பிரிவின்கீழ் அவருக்குச் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பத்தைத் தீர்மானித்தல் வேண்டும்.*

2-PL 007065 -1115 (2013/03)

(1இ) (அ) பணிப்பாளர் தலைமையதிபதி விடயத்துக்கேற்ப இறக்குமதியாளர் அல்லது ஏற்றுமதியாளருக்கு (1ஆ) என்னும் உட்பிரிவில் குறித்துரைக்கப்படும் காலத்தினுள் தீர்மானத்தினை அறிவிக்கத் தவறுகின்றவிடத்து; அல்லது

(ஆ) அத்தகைய தீர்மானத்தினால் இன்னலுறுகின்ற எவரேனுமாள்,

விடயத்துக்கேற்ப (1ஆ) உட்பிரிவில் குறித்துரைக்கப்படும் காலம் காலாவதியாவதிலிருந்து அல்லது அத்தகைய தீர்மானம் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து முப்பது நாட்களுள் 2011 ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க, வரிமேன்முறையீட்டு ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவுக்கு மேன்முறையீட்டைச் செய்யலாம்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்